# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| 10 ஜூன் 2018 | பொதுக்காலம் 10ம் ஞாயிறு | 2ம் ஆண்டு |
|---|---|---|



அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இயேசு தம் வாழ்நாளில் எந்த அளவுக்குப் பாராட்டும் புகழ்ச்சியும் வணக்கமும் பெற்றாரோ, அந்த அளவுக்கு இகழ்ச்சியும், புரிந்துணர்வின்மையும், அவதூறும் பெற்றுக்கொண்டார் என்பது உண்மை. அந்த உண்மையை தூய மாற்கு அச்சமின்றி எழுதி வைத்திருக்கிறார். அதற்கு என்ன காரணம்?

1. நற்செய்தி அறிவிப்பாளரின், இறைவாக்கினரின், போராளியின் பணியில் எதிர்ப்புகளும், ஏளன விமர்சனங்களும் எழத்தான் செய்யும். அதை எல்லாம் தூசு எனப் புறந்தள்ளிவிட்டு பணியைத் தொடர வேண்டும். யாராவது உங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால், ‘எங்கள் கால்களில் ஒட்டியுள்ள உங்கள் ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிவிடுறோம்’ (லூக்கா 10:11) என்று சொல்லித் தம் பணியைச் தொடரச் சீடர்களைப் பணித்தார் அல்லவா! அந்த மனநிலையை இயேசுவும் கொண்டிருந்தார் என்று நமக்குக் காட்ட.

2. பச்சை மரத்துக்கே இவ்வாறு செய்கின்றார்கள் என்றால், பட்ட மரத்துக்கு என்னதான் செய்ய மாட்டார்கள்? (லூக்கா 23:31) என இயேசுவே உரைக்கவில்லையா? எனவே நம் வாழ்வில் நாம் சந்திக்கின்ற அவதூறுகள் பற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம் என்று நமக்குச் சுட்டிக் காட்ட.

எனவே, யாராவது நம்மைப் பற்றி ஏளனமாகவோ, அவதூறாகவோ பேசினால், இயேசு கிறிஸ்து கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் (பிலிப்பியர் 2:5) என்னும் தூய பவுலடியாரின் அறிவுரையை நம் மனதில் கொள்வோம். நாமும் இயேசுவைப் போலவே இழிவுரைகளைப் புறக்கணித்து, நம் பணியைத் தொடர வேண்டிய ஆற்றலை அவரிடமே வேண்டுவோம். வாழ்த்துக்கள்.



## இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.



## ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 17-06-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம் மதியம் **2:30** முதல் **4:00** மணி வரை மூடப்பட்டிருக்கும். நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

## GIFT திட்டத்திற்கான நினைவூட்டல்

அடுத்த வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை நமது உயர்மறைமாவட்டத்தின் **GIFT** (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். அதற்கான உங்கள் பங்களிப்புகளைக் கொண்டு வரும்படி அன்புடன் நினைவூட்டுகிறோம். இக்காணிக்கையானது நமது உயர்மறைமாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைப்புகளுக்காகவும் கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## புனித வின்சென்ட் தே பவுல் காணிக்கை

கடந்த ஞாயிறு **03-06-2018** அன்று எடுக்கப்பட்ட காணிக்கையில் கிடைத்த தொகை **S$4,191.40** வசதியற்றோருக்கு வழங்கப்பட்ட தொகை **S$7,310.00** தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.



## ஆலயப் பணிக்குழுக்களின் ஒன்றுகூடல்



**வரும் 15-06-2018 வெள்ளி காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை**

நமது ஆலயப் பணிக்குழுக்களின் ஒன்றுகூடல் **(Parish Assembly)** நடைபெறும். இந்த ஆலயத்திற்கு வருவோர் பலர் வெகு தொலைவிலிருந்து வருகிறீர்கள் என்று நாங்கள் அறிவோம். ஆயினும், நீங்களும் இந்த ஆலயத்தின் உறுப்பினர், இதன் வளர்ச்சியிலும் செயல்பாட்டிலும் உங்களின் அக்கறையும் ஆர்வமும் எங்களுக்குத் தேவை. சிறு துளிகள் பெரு வெள்ளமாகிறது. பல சின்னஞ்சிறு விளக்குகளாகிய நாம் ஒன்று சேர்ந்தால் தான் இந்த சிங்கப்பூர் தேச மக்களுக்குப் பிரகாசமான ஒளியாகலாம். எனவே நமது திருச்சபையைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்று கூடுவோம். தங்கள் பெயர்களைப் பதிவு செய்தவர்கள் மட்டுமே இந்நிகழ்ச்சியில் பங்கேற்க முடியும். உங்களுக்கு மதிய உணவும் தேனீரும் வழங்கப்படும்.



## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு

**15-07-2018, ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை (பல்நோக்குச் சமூகக் கூடம்)**

முன்பதிவுக் கட்டணம் **$30** செலுத்தி, முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு, கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

**தொடர்பு: திரு. ரெக்ஸ் (98226171)**

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | ள | வு | ற் | ள் | க | தை | ப | கை | யை |
| பு | ரு | ய | க் | தை | த் | ள | வு | ரு | தி |
| ப் | ச | நெ | ப | ணி | ற | ண | டு | ழ் | மு |
| னி | தி | ரு | மு | ற் | ள் | யோ | லு | வா | பு |
| ன் | கே | ப் | ப | க | கை | கி | யி | ம | த் |
| ம | க் | ப் | ல் | க் | வ | ஞா | சி | வி | பே |
| ல் | மை | ன | பி | ள | ம | வி | ட் | ற | ர |
| பு | ன் | ம் | உ | யா | லை | க | மா | வு | ன் |
| இ | ந | ன் | ப | டி | க் | கை | யை | ழி | பு |
| பி | வி | க | வா | பி | ள | வு | ப | டு | ம் |

1. நான் கடவுள் மீது __________ இருந்தேன்.
2. __________ மீட்பும் ஆண்டவரிடமே உள்ளன.
3. இவையனைத்தும் உங்கள் __________ நிகழ்கின்றன.
4. நாம் அடையும் __________ மிக எளிதில் தாங்கக் கூடியவை.
5. உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் __________ உண்டாக்குவேன்.
6. உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் __________த் தின்பாய்.
7. தனக்கு எதிராகத் தானே __________ எந்த அரசும் நிலைத்து நிற்க முடியாது.
8. தூய ஆவியாரைப் பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் __________ப் பெறார்.
9. கடவுளின் __________ நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | தொடக்க நூல் 3 : 9 – 15 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 130 : 1-2, 3-4, 5-6, 7-8 |
| **பதிலுரை:** | பேரன்பும் மீட்பும் ஆண்டவரிடமே உள்ளன. |
| **இரண்டாம் வாசகம்:** | 2 கொரிந்தியர் 4 : 13 – 5 : 1 |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! 'இவ்வுலகின் தலைவன் வெளியே துரத்தப்படுவான். நான் மண்ணிலிருந்து உயர்த்தப் படும்போது அனைவரையும் என்பால் ஈர்த்துக் கொள்வேன்' என்கிறார் ஆண்டவர். அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | மாற்கு 3 : 20 – 35 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |





தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.